ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2019.12.30

## 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நாணயவிதி சட்டக் கட்டளையுடன் இசைந்துசெல்லும் விதத்தில் 2019 இறுதியில் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதத்தின் மீதான இலக்கினை பூர்த்திசெய்தல்

"அண்மைய கொள்கைத் தீர்மானங்களை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட சந்தைக் கடன் வழங்கல் வீதங்களுக்கு ஊடுகடத்துவதன் வினைத்திறனை அதிகரித்தல்" தொடர்பான 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நாணயவிதி சட்டத்தின் கட்டளை, மற்றைய விடயங்களுடன், ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியும் 2019 ஏப்பிறல் 26ஆம் திகதியிடப்பட்ட வாராந்த பொருளாதார குறிகாட்டிகளின் வெளியீட்டில் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அவற்றின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதத்துடன்[1] ஒப்பிடுகையில் 2019 திசெம்பர் 27ஆம் நாளளவில் குறைந்தபட்சம் 250 அடிப்படைப் புள்ளிகளினால் அவற்றைக் குறைத்தல் வேண்டுமென தேவைப்படுத்தியது. இது, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் எவ்வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் இக்கட்டளைத் திகதியன்று, அல்லது, அதற்குப் பின்னரான எந்த ஒரு நேரத்திலும் ஆண்டிற்கு 9.50 சதவீதத்தினை அடைந்துள்ளதோ அல்லது அதற்கும் கீழே வீழ்ச்சியடைந்துள்ளதோ அத்தகைய வர்த்தக வங்கிகளுக்கு ஏற்புடைத்தாகமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்ட கட்டளையுடன் அநேகமான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் இணங்கியொழுகியுள்ளமையினை மத்திய வங்கி அவதானித்திருப்பதுடன் குறிப்பாக, சில உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் இவ்வொழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்காக, 2019 திசெம்பர் 27ஆம் திகதி முடிவடைந்த வாரகாலப்பகுதியில் தமது சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதத்தினை மிக அதிகளவில் குறைத்துக்கொண்டன. இதற்கமைய, ஒட்டு மொத்த வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் 2019 ஏப்பிறல் 26ஆம் திகதியிலுள்ளவாறான 12.24 சதவீதத்திலிருந்து 2019 திசெம்பர் 27ஆம் திகதியன்று உள்ளவாறான 9.94 சதவீதத்திற்கு 230 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்துள்ளது. 2016 ஏப்பிறல் 26 இற்குப் பின்னர் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் தனிஒற்றை இலக்க மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

கட்டளைக்கமைய, எந்தவொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியும் அதன் சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதத்தினை குறைக்கப்பட்ட மட்டத்திலிருந்து அதிகரிக்கக்கூடாது என்பதுடன் சந்தைக்கடன் வழங்கல் வீதங்கள், குறிப்பாக, சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதத்துடன்

---

[1] வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் என்பது வர்த்தக வங்கிகளினால் அவற்றின் முதன்மை வாடிக்கையாளர்களுக்கு குறிப்பிட்ட வார காலப்பகுதியில் குறுங்கால கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான ஏற்புடைத்தான வட்டி வீதங்களின் நிறையேற்றப்பட்ட சராசரி வீதமாகும்.

இணைக்கப்பட்டுள்ள சந்தைக் கடன் வழங்கல் வீதங்கள், கிரமமான மீள்விலையிடலுடன் தொடர்ந்தும் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும்கூட, மக்கள் வங்கி, கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி, இந்தியன் ஓவசீஸ் பாங்க், எம்சிபி வங்கி லிமிடெட், பப்ளிக் பாங்க் பெர்காட், ஸ்டான்டட் சார்டட் வங்கி, அமானா வங்கி மற்றும் அக்சிஸ் வங்கி லிமிடெட்[2] என்பன 2019ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நாணயவிதி சட்டத்தின் கட்டளையுடன் இணங்கியொழுகத் தவறியிருக்கின்றன என்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை மத்திய வங்கியானது நிதியியல் முறைமையினூடாக அண்மைய கொள்கைத் தீர்மானங்களை வினைத்திறனுடன் ஊடுகடத்தப்படுவதிலிருந்து பொதுமக்களுக்கு தொடர்ச்சியாக நன்மைகள் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்கு இவ்வங்கிகள் தொடர்பிலும் அதேபோன்று இக்கட்டளைச் சட்டத்தின் மற்றைய ஏற்பாடுகளை பூர்த்திசெய்திருக்காத உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தொடர்பிலும் பொருத்தமான வழிமுறைகளை மேற்கொள்வதற்கு எண்ணியுள்ளது.

**வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் - வங்கி வாரியான வீதங்கள்**

| வங்கி | 26-04-2019 (ஆண்டிற்கு % ) | 27-09-2019 (ஆண்டிற்கு % ) | 01-11-2019 (ஆண்டிற்கு % ) | 20-12-2019 (ஆண்டிற்கு % ) | 27-12-2019 (ஆண்டிற்கு % ) | 2019.04.26 இலிருந்து அடிப்படைப் புள்ளி மாற்றம் | துண்டு விழும் தொகை (அடிப்படைப் புள்ளிகள்) |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | 12.88 | 11.56 | 10.97 | 10.39 | 10.24 | -264 | |
| மக்கள் வங்கி | 12.49 | 10.60 | 10.36 | 10.50 | 10.15 | -234 | 16 |
| அட்டன் நஷனல் வங்கி | 12.27 | 10.70 | 10.49 | 10.26 | 9.68 | -259 | |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 12.07 | 10.42 | 10.12 | 9.84 | 9.87 | -221 | 29 |
| சம்பத் பாங்க் பிஎல்சி | 12.95 | 11.07 | 10.51 | 11.43 | 10.44 | -251 | |
| செலான் பாங்க் பிஎல்சி | 14.22 | 10.90 | 10.93 | 10.67 | 10.44 | -378 | |
| யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி | 16.68 | 12.00 | 11.45 | 10.82 | 10.72 | -596 | |
| பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி | 15.49 | 13.50 | 13.42 | 12.90 | 12.90 | -259 | |
| நஷனல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி | 12.83 | 11.58 | 10.52 | 10.57 | 10.25 | -258 | |
| நேஷன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி | 12.45 | 11.33 | 10.75 | 10.18 | 9.89 | -256 | |
| டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி | 13.84 | 11.46 | 11.24 | 11.90 | 11.25 | -259 | |
| சிற்றி பாங்க் என் ஏ | 11.30 | 9.94 | 8.68 | 8.48 | 8.93 | -237 | |
| டொயிஷ் பாங்க் ஏஜி | 10.90 | 9.75 | 10.36 | 9.65 | 9.49 | -141 | |
| ஹபீப் பாங்க் லிமிடெட | 12.73 | 12.73 | 10.57 | 10.42 | 10.21 | -252 | |
| த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட் | 9.84 | 8.51 | 8.59 | 9.02 | 8.84 | -100 | |
| இந்தியன் பாங்க | 13.73 | 12.36 | 12.08 | 11.70 | 11.17 | -256 | |
| இந்தியன் ஓவசீஸ் பாங்க் | 14.23 | 12.69 | 12.69 | 12.69 | 12.69 | -154 | 96 |
| ஐசிஜசிஜ பாங்க் லிமிடெட்[2] | 12.76 | 10.14 | 10.14 | 10.14 | 10.14 | -262 | |
| எம்சிபி பாங்க் லிமிடெட் | 13.23 | 11.44 | 12.38 | 10.92 | 10.92 | -231 | 19 |
| பப்ளிக் பாங்க் பெர்காட் | 13.25 | 13.25 | 13.37 | 12.50 | 12.38 | -87 | 163 |
| ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க் | 11.52 | 10.22 | 10.05 | 9.53 | 9.79 | -173 | 29 |
| ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா | 11.50 | 9.49 | 9.36 | 9.40 | 9.40 | -210 | |
| அமானா பாங்க் பிஎல்சி | 13.16 | 11.40 | 11.40 | 10.95 | 10.95 | -221 | 29 |
| அக்சிஸ் பாங்க் லிமிடெட்[2] | 13.23 | 12.43 | 11.57 | 11.57 | 11.57 | -166 | 84 |
| காகில்ஸ் பாங்க் லிமிடெட் | 16.28 | 14.68 | 12.87 | 14.57 | 12.42 | -386 | |
| பாங்க் ஒப் சைனா லிமிடெட் | வழங்கப்படவில்லை | | | | | | |

[2] இலங்கை மத்திய வங்கி, அக்சிஸ் வங்கி லிமிடெட்டினதும் ஐசிஜசி வங்கி லிமிடெட்டினதும் தாய் வங்கிகளின் கோரிக்கைக்கிணங்க இலங்கையில் அவற்றின் வியாபாரத் தொழிற்பாடுகளை, குறிப்பிட்ட நிபந்தகைகளுக்கிணங்க மூடிவிடுவதற்கு அனுமதியளித்திருக்கிறது. இதற்கமைய, இவ்விரண்டு வங்கிகளும் தற்பொழுது பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வது உட்பட வங்கித்தொழில் வியாபாரங்களை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. மூடிவிடுகின்ற தொழிற்பாடுகள் நிறைவடைந்ததும் அவற்றிற்கு வழங்கப்பட்ட உரிமங்கள் இரத்துச் செய்யப்படும்.


வங்கி வாரியான வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதங்களில் காணப்பட்ட உண்மையான குறைப்பு மற்றும் துண்டுவிழும் தொகை
பிஓசி
பிபீ
எச்என்பீ
கொம்பாங்க்
சம்பத்
செலான்
யூனியன்
பான்ஏசியா
என்டிபீ
என்ரிபீ
டிஎவ்சிசி
சிற்றிபாங்க் *
டொயிஷ் *
ஹப்ப்
எச்எஸ்பீசி *
இந்தியன் பாங்க்
ஐஓபீ
ஐசிஐசி
எம்சிபீ
பப்ளிக் பாங்க்
எஸ்சிபீ
எஸ்பீஐ *
அமானா
அக்சிஸ்பாங்க
கார்கில்ஸ்
பாங்க் ஒப் சைனா
அ.புள்ளிகள்
0
-50
-100
-150
-200
-250
-300
-350
-400
-450
-500
-550
-600
* சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் 9.50 சதவீதத்திற்கு கீழே வீழ்ச்சியடைந்தது
2019 திசெம்பர் 27 அன்று துண்டுவிழும் தொகை
2019 ஏப்பிறல் 26 இலிருந்தான குறைப்பு